இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 196 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 13 – செவ்வாய்க்கிழமை 25 பிப்ரவரி 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 196 : Thiruvalluvar Year - 2056 - Maasi 13 - Tuesday 25 February 2025 - Dak 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கூட்டுறவுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மக்களுக்கு பொது மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் கிடைக்க செய்யும் வகையில் "முதல்வர் மருந்தகம்" என்ற புதிய திட்டம் மூலம் முதற்கட்டமாக தமிழ்நாடு முழுவதும் 1000 மருந்தகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து, பயனாளிகளுக்கு முதல்வர் மருந்தகங்கள் அமைப்பதற்கான மானியங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க. நந்தகுமார், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) எஸ்.பி. அம்ரித், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கூட்டுறவுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மக்களுக்கு பொது மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் கிடைக்க செய்யும் வகையில் "முதல்வர் மருந்தகம்" என்ற புதிய திட்டம் மூலம் முதற்கட்டமாக தமிழ்நாடு முழுவதும் 1000 மருந்தகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து, மல்லிகை பழங்குடியினர் மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு கடனுதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க. நந்தகுமார், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) எஸ்.பி. அம்ரித், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 'திராவிட மாடல்' ஆட்சியில்,

# கல்வி - மருத்துவம் இரு கண்கள்!

## 'முதல்வர் மருந்தகம்' திட்டத்தைத் தொடங்கி வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, பிப். 25 -**

**'திராவிட மாடல்' ஆட்சியில் கல்வி - மருத்துவம் இரு கண்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் ஆயிரம் முதல்வர் மருந்தகங்களை தொடங்கி வைத்து உரையாற்றும் போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கில், கூட்டுறவுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "முதல்வர் மருந்தகம்" என்ற புதிய திட்டம் மூலம் தமிழ்நாடு முழுவதும் 1000 மருந்தகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு:-

"முதல்வர் மருந்தகங்கள்" திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கூட்டுறவுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மக்களுக்கு பொது மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் கிடைக்கச் செய்யும் வகையில் "முதல்வர் மருந்தகம்" என்ற புதிய திட்டம் மூலம் முதற்கட்டமாக தமிழ்நாடு முழுவதும் 1000 மருந்தகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

"கல்வியும், மருத்துவமும்தான் நம்முடைய திராவிட மாடல் அரசின் இரு கண்களாக விளங்கிக் கொண்டிருக்கிறது!" கல்வியில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை வளர்த்தெடுக்கவும், சிறந்த மருத்துவக் கட்டமைப்பை உருவாக்கி, அனைவருக்கும் தரமான மருத்துவம் கிடைக்கக்கூடிய வகையில் உறுதிசெய்யவும், பல்வேறு திட்டங்களை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்!

அதனுடைய தொடர்ச்சியாகத்தான், நம்முடைய தலைமைச் செயலாளர் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, கடந்த ஆகஸ்ட் 15 விடுதலை நாள் நிகழ்ச்சி கோட்டையில் நடைபெற்றபோது, கொடியேற்றிவிட்டு உரையாற்றும்போது, ஜெனரிக் மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில், முதல் கட்டமாக ஆயிரம் மருந்தகங்கள் திறக்கப்படும் என்று அறிவித்தேன். அந்த அறிவிப்பு இன்றைக்கு செயல்பாட்டுக்கு வருவது பெருமகிழ்ச்சியை தருகிறது!

**சாதாரண, சாமானிய மக்களுக்கான அரசு!**

நம்முடைய அரசு, சாதாரண, சாமானிய மக்களுக்கான அரசு என்பதற்கு அடையாளம்தான், இந்த முதல்வர் மருந்தக திட்டம்! பொதுமக்கள், தங்களுக்கான மருந்துகளை அதிக விலை கொடுத்துவாங்கவேண்டியநிலையை மாற்றவேண்டும், அவர்களின் சுமையை குறைக்கவேண்டும் என்று இந்த மருந்தகங்களை நாங்கள் திறப்பதற்கு திட்டமிட்டோம். "Sugar, BP என்று சொல்லப்படக்கூடிய நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற பாதிப்புகளுக்கு தொடர்ந்து, அதிகளவில் மருந்துகளை வாங்க வேண்டிய காரணத்தால், அதிகமான செலவு ஆகிறது" என்று பலரும் கவலைப்பட்ட காரணத்தால், இந்த மருந்தகங்களை திறக்க நாங்கள் திட்டமிட்டோம். சொன்னது போன்றே, இன்றைக்கு ஆயிரம் மருந்தகங்களை திறந்திருக்கிறோம்!

இந்த மருந்தகங்களைச் சிறப்பாக செயல்படுத்த மருந்தாளுநர்களுக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும், மானியம் மற்றும் தேவையான கடனுதவியை அரசு வழங்கியிருக்கிறது! இந்த மருந்தகங்களை அமைக்க விருப்பமுள்ள B.Pharm, D.Pharm முடித்தவர்களிடம் இருந்தும், இல்லை, அவர்கள் ஒப்புதலோடு தொழில்முனைவோர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தொழில் முனைவோருக்கு மூன்று இலட்சம் ரூபாயும், கூட்டுறவுச் சங்கமாக இருந்தால் இரண்டு இலட்சம் ரூபாயும்

தொடர்ச்சி 2–ஆம் பக்கம்

## நமது 'முதல்வரின் காலை உணவுத் திட்டம்' வெளிநாடுகளிலும் பரவுகிறது! முதலில் கனடா நாட்டிலும், இப்போது

# இங்கிலாந்து நாட்டிலும் தொடங்குகிறது!

## பள்ளிகளில் ஏப்ரலில் அமலாகிறது!

**லண்டன், பிப். 25 -**

**நமது முதல்வரின் காலை உணவுத் திட்டம் வெளிநாடுகளிலும் பரவுகிறது! முதலில் கனடா நாட்டிலும், இப்போது இங்கிலாந்து நாட்டிலும் தொடங்குகிறது.**

மாணவ, மாணவிகள் பசியுடன் பள்ளிக்கு வருவதை தடுக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட காலை உணவுத் திட்டம் இந்தியா மட்டுமின்றி உலகெங்கும் பிரபலமடைந்துள்ளது. வரும் ஏப்ரல் மாதம் முதல் இங்கிலாந்து நாட்டிலும் காலை உணவுத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கும் திட்டம் கடந்த 2022ம் ஆண்டு செப்டம்பர் 15ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

**உலக நாடுகளுக்கே வழிகாட்டி!**

இதனைத் தொடர்ந்து அரசு உதவிப் பெறும் பள்ளிகளிலும் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டது. இத்திட்டம் மூலம் சுமார் 2 ஆயிரம் பள்ளிகளில்



படிக்கும் லட்சக்கணக்கான மாணவ, மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டைப் பின்பற்றி இத்திட்டத்தை தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களும் செயல்படுத்தி வருகின்றன. இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலக நாடுகளுக்கே 'திராவிட மாடல்' அரசு வழிகாட்டுகிறது.. தமிழ்நாட்டின் காலை உணவுத்திட்டத்தை கனடா அரசு , தங்களது நாட்டில் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தை இங்கிலாந்து அரசும் செயல்படுத்த உள்ளது. வருகின்ற ஏப்ரல் மாதம் முதல் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என இங்கிலாந்து அரசு அறிவித்துள்ளது. முதற்கட்டமாக 750 பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக அந்நாட்டின் பெண்கள் மற்றும் சமத்துவத்திற்கான அமைச்சர் பிரிட்ஜெட் பிலிப்சென் தெரிவித்துள்ளார். காலையில் பள்ளி குழந்தைகளுக்கு கோதுமை கஞ்சி, பழங்கள், தயிர் என ஆரோக்கியமான சத்தான காலை உணவுகள் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தால் 18 லட்சம் குழந்தைகள் பயனடைவர்கள் என்று இங்கிலாந்து அமைச்சர் கூறியுள்ளார்.

காலை சிற்றுண்டி திட்டம் மூலம், மாணவர்களின் கற்றல் திறன் மேம்படும் என்றும், பல்வேறு போட்டிகளில் அவர்களும் திறம்பட கலந்துகொள்ள முடியும் என்றும் இங்கிலாந்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.